# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

சுற்றறிக்கை எண்:95 தேதி:-01.02.2016

## தேர்தல் தேதி அறிவிப்பு

அன்பார்ந்த தோழர்களே,

7ஆவது சங்க அங்கீகார தேர்தலுக்கான அறிவிப்பை கார்ப்பரேட் அலுவலகம் வெளியிட்டுள்ளது. அதன் 01.02.2016 தேதியிட்ட கடித எண்:-BSNL/5-1/SR/2015(i) மூலம் தொழிற்சங்க சட்டத்தின் அடிப்படையில் சங்கத்தை REGISTER செய்து குறைந்த பட்சம் ஒரு வருட காலம் ஆகியுள்ள சங்கங்கள் இந்தக் கடிதம் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் மனு தாக்கல் செய்ய வேண்டும். கார்ப்பரேட் அலுவலகம் வெளியிட்டுள்ள 01.02.2016 தேதியிட்ட கடித எண்:-BSNL/5-1/SR/2015(ii) மூலம் கீழ்கண்ட உத்தேச அட்டவணையை தேர்தலுக்கென கொடுத்துள்ளது.

| வ எண் | நிகழ்வு | கால அட்டவணை |
|---|---|---|
| 1 | **தேர்தல் தேதி** | **10.05.2016** |
| 2 | **மாவட்டங்களில் வாக்கு எண்ணிக்கை** | **12.05.2016** |
| 3 | **முடிவு அறிவிப்பு** | **12.05.2016** |

மனு தாக்கல் செய்ய வேண்டிய பணிகளை நமது மத்திய சங்கம் செய்து வருகிறது. வாக்காளர் பட்டியலையும், வாக்கு சாவடிகளை நிர்ணயம் செய்யும் பணிகளையும் நிர்வாகம் மேற்கொள்ள வேண்டி உள்ளது. இவற்றில் நமது மாவட்ட செயலாளர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

தேர்தலுக்கான ஆயத்த பணிகளை நாம் உடனடியாக மேற்கொள்வோம். நமது சங்கத்தை மீண்டும் முதன்மை சங்கமாக கொண்டு வரும் வண்ணம் நாம் ஒவ்வொரு ஊழியர்களையும் சந்திப்போம். நமது நிறுவனத்தையும், ஊழியர்களின் உரிமைகளையும் பாதுகாக்க நாம் எடுத்த நடவடிக்கைகளை எடுத்துக் கூறி நமது சங்கத்திற்கு வாக்குகளை சேகரிப்போம். இறுதி வெற்றி நமதே.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**